	m:p|ṡ : ṡ:ṙ : ṙ|m:ġ.ṙ|ṡ:p.p:n.n:ṡ|ṡ : ṙ| ṡ:n:d :p|p:—|m g:r.m:p.n:ṡ| (R.)

SUDDHASĀVĒRI ($r^2g^3m^1d^2n^3$) $\frac{2.4.}{6}$ Vil. ka.

Ch.	ḍ :—|s : r: m :—|g:—|r : r: —:g|r:—|s:ḍ:—:ṇ|s$_k$:—|—:—:—:—|
	m:—|m:m:m :—|m:—|d:p:m:—|g:—|r : r :s:r|g$_k$:—|—:—:—:—||

SUDDHAMADHYA ($r^2g^2m^1d^2n^2$) $\frac{4.2.2.}{8}$ Vil. ka.

R.
s.r : ṇ.s : r.r : rs.r$_k$ | r.m : g.m | m .g : rm. gr |
r.m : r.m : p.p :dn.ṡ | d.n : d.p | mg. mp:mg.r$_k$ | (R.)

4. தரித்திரன் பிரலாபம்.

இ-ம், சங்கராபரணம். ஆதிதாளம்.

கண்ணிகள்.

1. கருணைவடிவமுள கடவுளே இரக்கத்தின் - கடலே கண்பாராய்
அருணகோடிப் பிரகாசா அன்பர்கள் - அனையே கண்பாராய்.

2. உறுதுணை நீயன்றி வேறுண்டோ உடற்குளே-உயிரே கண்பாராய்
மறுவல ரெனினுங் கைவிடா தாதரி - வள்ளலே கண்பாராய்.

3. அறிவிலா நாய்கள் நக்கி யென்னோயை - ஆற்றுதே கண்பாராய்
செறிபொருள் செல்வன் மனமிரங்கிலனே - தெய்வமே கண்பாராய்.

---

5. தனிகன் மரணம்.

இ-ம், தீரசங்கராபரணம். (இந்துஸ்தான் நடை.) சதுஸ்ரஏகதாளம்.

கண்ணிகள்.

1. தீரமுடனே அதிவீரமுள்ள எமதூதனும் வந்தனனே
செல்வசகாயனைக் கொண்டுபோக எமதூதனும் வந்தனனே.

2. ஆஸ்திமானென்று பயந்தோடுவானோ ஆச்சுது காலமிப்போ
ஆரடா வாவென்று சொல்லியே எமதூதனும் வந்தனனே.

3. தெய்வ பயமில்லாத பாமரர்கள் திகிலடைந் தேங்கிடவே
செப்பருங்கோர ரூபத்துடனே எமதூதனும் வந்தனனே.

4. ஆனபொருளைத் திடீரெனவிட்டவன் அங்கலாய்த்துப் புலம்ப
ஈனர்க்குறு நரகதிற்சேர்க்க எம தூதனும் வந்தனனே.

---

6. நரகில் தனிகன் வேதனை.

இ-ம், தேசிகதோடி. சதுஸ்ரஏகதாளம். (அதீதம்).

பல்லவி.

வேதனை மிகவாகுதே
வெந்தயர்கின்றேன் - தளர்கின்றேன்.

அநுபல்லவி.

நீதனே ஆபிரகாமே - நீளுஞ் சோகமற
மூளுந்தாகங்கெட - நீ தயைசெய். (வே)

சரணங்கள்.

1. உண்டுடுத்தியே வாழ்நாளை
ஓட்டினேன் பரமன் தாளைக்
கண்டுகொண் டுய்யு நெறியைக்
காணவில்லை - நலம் பூணவில்லை - மதி தோணவில்லை. (வே)

2. ஏழையோ சுகத்தைப் பெற்றான்
ஈனனான் துன்பத்தை யுற்றேன்
தாழவென் தாகமிப்போது
தானே அவன் விரலி - னாலே ஒருதுளிநீர் - தாராயையா. (வே)

SANKARĀBHARANAM ($r^2g^3m^1d^2n^3$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

Ch. | s.s:s.r : g :g_k | m.g:g.r | g.m : p | m : g : r.r : s.s | r_k:—.g | r.r: s |
| r :g.r:s.ṇ : ḍ$_k$ | s.r : g.r | s.ḍ :ḍ$_k$ | s : r : g : p.g | r_k:— | s :— ||

DHĪRASANKARĀBHARANAM ($r^2g^3m^1d^2n^3$) $\frac{4}{4}$ Mad. ka.

Ch. | p : ṡ : — : ṡ | ṡ : — : n : — | n : ṡ : — : n | d :—: n : — |
ṡ : ṙ : — : ṡ	ṡ : n : — : d	p : —: — : —	—:—: g : m
p : d:— :n^2	d : — : p : —	m : p : — : m	g : r : g_k : —
m : g:— : r	g : g : — : r	s : — : — : —	—:—:— : —	

DĒSIKA THŌDI ($r^1g^2m^1d^1n^2$) $\frac{4}{4}$ Vil. ka.

P. R :s | r : ṇ : — : ḍ^2 | ṇ : s : r : — | g : r : g_k: — | — : — : —:r |
| s : r : m : — | g :— : r : — | g : r : s : — | — : — : —} Fin.

A.P.: p | p : d : — : p | d : n : —:— | d : p :—: — | — : — : —:m |
| m : — : m:m | — : m : g:m | m : —:m: p | — : m : p :m |
| g : — : g : — | r : — : s :— | — : — : —} R

Ch. P+A P.

7. ஆபிரகாம் கூறல்.

இ-ம், சுருட்டி. ஏகதாளம்.

பல்லவி.

அங்கே வரக்கூடாதப்பா - இங்கிருந்தாரும்
அங்கே வரக்கூடாதப்பா.

அநுபல்லவி.

அங்கே வரக்கூடாதே அதோபாதலம் பாரே
பொங்கு முனதுதாகம் போகவழியில்லை யோரே. (அ)

சரணங்கள்.

1. பூதலத்திலேயுனக்கு யாதுங் குறையில்லையே
தீதுற மறுமையிலே சேர்ந்ததுகாண் தொல்லையே. (அ)

2. பாரிடம் பிணிவறுமை பற்றியே யிவனுழன்றான்
சீரிய பாக்கியமுற்றுத் தேறுதலடைகின்றான். (அ)

---

8. தனிகன் வேண்டுகோள்.

இ-ம், நீலாம்பரி. ஆதிதாளம். (அனுகதம்).

விருத்தம்.

ஐயகோ நரக துன்ப மாற்றகில் லேனென் செய்வேன்
வையநீ டெனது சோத ரரும்வரா திருக்க விங்கே
ஐயநீ யவனை யேவி யவர்க்குரை செய்வி யென்றான்
உய்யுமா றறிகி லாதா னுகுத்தகண் ணீரி னோடே.

---

9. ஆபிரகாம் மறுமொழி.

இ-ம், சங்கராபரணம். ரூபகதாளம்.

பல்லவி.

மோக்ஷத்தார் சென்றுரைப் பினும்
மூடர் குணப் படார்களே.

அநுபல்லவி.

காட்சிக் கிடமாம் சகல ஞான
கலையு மவரை யுணர்த்தாவிடினே (மோ)

சரணம்.

வேத னளித்த சுருதியும்
மேலோ ரருள் சொல்லு றுதியும்
பூதலம் நன்னெறியி லவரைப்
புகுத்தித் துலக்கி வையாவிடினே (மோ)

CHURUTTI ($r^2g^3m^1d^2n^2$) $\frac{4}{4}$ Mad. ka.

P.	R. r : m : r : m	p : p : n : d	p : — : — : p	m : g : r : s
	r : —:m : m	m :g : p : m	r : —:— : —	Fin. s : —:—:—
A.P.	p : d : n : d	p : p : d : m	p : p : n : n	ṡ : — : ṡ:—
	n : ṙ : ṡ : ṡ	n : d : p : p	n : d : p : m	R g : r : g : s

Ch. A.P.

NĪLĀMBARI ($r^2g^3m^1d^2n^3$) $\frac{4.2.2.}{8}$ Vil. ka.

R : p : m:g	m:p	n : ṡ	: n :n ; ṡ.ṡ	n : ṡ	n : p :—
: m.g : m:p	d : d	d.p: m	: g.m:p : m	r.g:m	R g : s :—

SANKARĀBHARANAM ($r^2g^3m^1d^2n^3$) $\frac{2.4.}{6}$ Vil. ka.

P.	R s:—	r.g:m:p	m : g	r: s	Fin :—:—	s : n	s : r:g : m	p:—	R m:p:m.g:r
A.P.	ṡ:—	ṡ:ṡ ; ṙ : ṡ	n : —	d : n : ṡ:ṡ	ṡ : n	ṡ:d:p : m	p :—	R m:g: r :s

Ch P+A.P.

VI. மதியீன சம்பன்னன் சரிதை.

(புத்தியீனமுள்ள ஐஸ்வரியவான். லூக். 12: 16-21).

1. கதை வரலாறு.

இ-ம், மாளவி. ஆதிதாளம்.

பல்லவி.

சொன்னார் மதியீன - சம்பனன்
தொல் சரிதை முன்னாள் - நாதனார்.

அநுபல்லவி.

பன்னேரமுந் துன்பந் - தரும் பொருளில்
பாழாய் மன மாழ்பவரே கேளீர். (சொ)

சரணங்கள்.

1. வளனூர் தனிலே கண்ணிய முடன்
வாழ்ந்திருந்த குடியானவ னொருவன்
நிலந்தனிலே பன்ன ளிருப்பனென
நினைந்தோர் நிமிஷம் நீணிலந் துறந்ததை. (சொ)

2. நயமாய் மேன்மேலுந் தனதுநிலம்
ஞாலம் விளைந்து மலிந்து பெருகிடவும்
பயந்தரு பொருள்மேல் மனதைவைத்துப்
பாழிலே மடிந்தான் மூடனவன். (சொ)

---

2. தானிய விளைவு.

இ-ம், கல்யாணி. ஆதிதாளம்.

பல்லவி.

மலைபோல் மிக மகிழ்ந்து புகழ்ந்து பலர்
வாரிக் குவித்தனரே.

அநுபல்லவி.

நிலமேல் வளனூர் பதி புலமேல் குடியானவன்
நீடி விளைத்த பல கோடி தானியங்களை (மலை)

சரணங்கள்.

1. ஞால நிலமுழுதுங் காலந் தவறாமலே
கோல விதைவிதைத்துச் சால ஜல மிறைத்து
மேலுங் களை யெடுத்தெக் காலுங் காவல்புரிந்து
ஏல விளைத்தறுத்த நீளுந் தானியங்களை (மலை)

2. ஓடி யிரவு பகல் நாடிப் பூமியாசையில்
நீடிக் கனபொருளைத் தேடிக் கவலையுற்ற
பாடி வளனூர் பதி யூடிருந்த தனிகன்
ஆடிப் பாடி மகிழ வீடிலாத தானியம் (மலை)

MĀLAVI ($r^2g^3m^1d^2n^2$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

P. | R n.d: p :—.m:g.m | r :g | —.m :p.d | n.d:—n:ṡ.n:d.n | Fin. p : d | —.n : ṡ |

A.P. | n.d:—.n: ṡ :d.n | ṡ :— | d.n : ṡ | ṙ.ġ : ṁ : ġ : ṁ.ṙ | ṡ :—.n | R d.n : ṡ |

Ch. | d.p: d_k: — : m | d.n:p | —.m :g.m | r :g.m: p :m.n | d.n: p | d.m:d_k |

| n.d :—.n: ṡ : d.n | ṡ :— | d.n : ṡ | ṙ : ġ.ṁ: ġ : ṁ.ṙ | ṡ :—.n | R d.n : ṡ |

KALYĀNI ($r^2g^3m^2d^2n^3$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

P. | R d.n : ṡ : — : n.d | p.d : p.m | g.m : g.r |

| g : r.s : r.g : m.g | r_k : — | s : Fin. — ||

A.P. | g : m.p : d.d : n.ṡ | ṙ.ġ : ṙ.ṡ | n.n : ṡ.ṡ |

| ṙ : ṡ.n : d.p : m.p | d_k : p.m | g.r : R gm.p |

Ch. | p : p.d : p.m : g.m | d : p.m | g.r : s.r |

| g : r.s : r.g : m.p | d : p.m | g.m : p.p |

| m : p.d : n.n : ṡ.ṡ | ṙ : ġ.ṙ | ṡ.n : ṡ.ṡ |

| ṙ ; ṡ.n ; d.p : m.p | d_k : p.m | g.r : gm.p |

3. சம்பன்னன் கவலை.

இ-ம், ப்யாக். ஏகதாளம்.

பல்லவி.

ஏது செய்குவேனே
இந்தத் தானியத்தைத் தானே.

அநுபல்லவி.

பூதலமேல் காப்பதற்கே
போதுமிட மில்லையே. (ஏது)

சரணம்.

களஞ்சியமோ சின்னது
கனதானிய முள்ளது
விளைந்த பயிரைத்தானே
வேறே யெங்கே வைப்பேனே. (ஏது)

---

4. மனைவி ஆலோசனை.

இ-ம், ஹரிகாம்போதி. (பார்ஸி நடை.) மிஸ்ர ஏகதாளம்.

பல்லவி.

இதற்கோ கவலைப்படு கின்றீர் நீளையா!

அநுபல்லவி.

எந்தன் மனதினுக் குகந்த - என்னுதா (இ)

சரணங்கள்.

1. மட்டிலாத் தானியம் சட்டமாய் நமக்கு
மாநிலம் விளைந்ததால் களஞ்சியம் - கட்டுவோம். (இ)
2. சிறியதை யிடித்துப் பெரிதாகக் கட்டி
சேர்த்துவைப்போம் தானியத்தை - கவலையேன்? (இ)
3. தச்சத் தலைவனை யிச்சண மழைப்பீர்
தடையின்றிக் களஞ்சியங் கட்ட - ஆக்கியாபியும். (இ)

---

5. களஞ்சியம் நிருமிக்க ஆக்யாபித்தல்.

இ-ம், காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

களஞ்சியமொன்று கட்டித்தாராய் - எந்தனுக்கிங்கே—

அநுபல்லவி.

உளமகிழவே மிகு மற்புதசீராய்
உன்னத பெருமிதமாக ஜரூராய்
தலமிதிலே யெனது தானிய நேராய்
சகலமும் வகையுட னடங்கவே பூராய் (கள)

BYĀG ($r^2g^3m^1d^2n^3$) $\frac{4}{4}$ Mad. ka.

P.	R s :— : g : —	m : — : p : —	m : — : g : —	m : g : s : — Fin. ‖
	p : ṡ : ṡ : n²	d : p : m : p	m : — : p : m	g : r : s : ṇ R
A.P.	p : —:ṡ : —	ṡ : ġ : ṙ : —	ṡ : n : ṡ : —	n : d : p : d
	ṡ : ṡ : n² : d	d : p : p : m	p : — : — : m	g : r : s : ṇ R

Ch. P.+A.P.

HARIKHĀMBŌDHI ($r^2g^3m^1d^2n^2$) $\frac{7\ (3.4.)}{7}$ Vil. ka.

P.	R m : p : — : g : — : m : —	p : d : — : n : d : p : —
	d : ṡ : — : ṡ : — : ṡ : —	p : p : — : d : n : p : —
A.P.	ṡ : — : — : ġ : — : ṁ : —	ġ : ṙ : — : ṡ : — : n : —
	ṡ : ṙ : — : ṡ : — : p : —	d : ṡ : — : n : d : p : — R
Ch.	m : — : — : g : — : m : —	p : m : — : p : — : — : —
	m : g : — : m : — : p : —	m : g : — : r : g : s : —
	ṡ : — : — : ġ : — : ṁ : —	ġ : ṙ : — : ṡ : — : n : —
	ṡ : ṙ : — : ṡ : — : p : —	d : ṡ : — : n : d : p : —

KĀMBŌDHI ($r^2g^3m^1d^2n^2$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

P.	R d.ṡ : ṡ.n : dn.dp : mp.mg	gm.p : — . g Fin.	m.p : d.p R
A.P.	p.pd : —,d.ṡṡ : ṙ.ġr : ṙ.r	ṡ.ṙġ : —, ṙ.ṡṡ	ṡn.nd : pd.ṡ
	m.gp : —,d.ṡṡ : ṙ.ġṙ : ṡn.³p	d.ṙ ṡ : —,n.³dp	ṡn.dp : gm.p R

சரணம்.

சுந்தரமொடு சொகுசாய்க் கட்டாய் - பழையதை நீ
சுத்தமாயிடித்தே யொரேமட்டாய் - எவருமெச்சும்
விந்தையாய் வானமளாவு நெட்டாய் - மிகசெலவு
மேவிடா வண்ணமதிக செட்டாய் - திறமையுடன்
எந்தன் மனக்கவலை யாவுமே ஓட
இசைந்து காண்பவரெல்லாருங் கொண்டாட
சந்ததமும் நிலையாகவே நீட
தானியம் யாவையுஞ் செம்மையாய்ப் போட. (கள)

---

6. இனி குறையில்லையெனல்.

இ-ம், இந்துஸ்தான் ப்யாக். ஏகதாளம்.

பல்லவி.

என்ன குறை யெனக்கு - இனிமேற்பட
என்ன குறை யெனக்கு.

அநுபல்லவி.

இந்நிலமேல் மன்னுந் தானியம்
பொன்னெனவே யிருக்க - இனிமேற்பட (எ)

சரணங்கள்.

1. பஞ்சம் வந்தாலென்ன - பாரே காய்ந்தாலென்ன
நெஞ்சந் துயர்ப்படுமோ - இனிமேற்பட (எ)

2. உண்டு சுகித்திரு உள்ளம் மகிழ்ந்திரு
பண்டுலகம் பலநாள் - என் நெஞ்சமே! (எ)

---

7. அசரீரி வாக்குண்டாதல்.

இ-ம், சக்ரவாகம். ரூபகதாளம்.

பல்லவி.

ஏ மதியீனனே கேளாய்
இனிவருவதனை யோராய்-

அநுபல்லவி.

பூமிமீதிற் பொருள் சேர்த்தாலும்
பொன்று நாளில் வருவதென்ன? (ஏ)

சரணங்கள்.

1. நாளை வருவதனைத் தேராய்
நரரின்வாழ்க்கை முடிவைப்பாராய்
வேளையெதுவோ நினது தேகம்
வீழுமென்பதனை யுணராய். (ஏ)

2. குறையில்லை யெனநவின்றாய்
கோடிக்கால மிருப்பேனென்றாய்
இறுதிவரு மின்றை யிரவே
எங்கே போகுஞ் சேர்த்தபொருட்கள்? (ஏ)

Ch. | ṡṡ.nn : dp . mg : mp.,m : gm.pd | ṡṡ.nd : pp . mg | mp., r : gm . pd |

| ṡ.nd : pm.gm : pp.,m : gm.pd | ṡn.nd : pm.gm | mp.,d : pm . gm |

| p.pd : —,d.ṡṡ : ṙ . gṙ : ṙ . ṙ | ṡ.ṙg :—,ṙ.ṡṡ | ṡn.nd : pd . ṡ |

| m,gp : —,d.ṡṡ : ṙ . ġṙ : ṡn.^{3}p | d.ṙṡ :—,n.dp | ṡn . dp : gm.p R |

HINDUSTĀN BYĀG ($r^2g^3m^1d^2n^3$) $\frac{4}{4}$. Mad. ka.

P. | R p : p :—: p | d : p :—: m | g_k: — : m : m | p : —: d : n^2_k |

| p : p :—: p | d : p : —: m | g : — : —:— | s : —:—: — Fin. ||

A.P. | g : g :— :m | p : — : d : n | ṡ : — : d : n | p :—:—: — |

| d : ṡ : d : ṡ | n : ṡ : d : n | ṡ : — : g : m | p :—: d : n^2_k R |

Ch. | g : g :— :m | p : — : m: p | d : — : n : ṡ | d : n : p: — |

| d : —: n:ṡ | ṙ : — : ṡ : n | ṡ : — : g :m | p :—: d: n^2_k R |

CHAKRAVĀHAM ($r^1g^3m^1d^2n^2$) $\frac{2.4}{6}$ Vil. ka.

Fin.

P. | R m:—|g:r :s : s | g:m | p:—:p:— || g:—| m:p:—:d | n : d | p :—:d:p R |

A.P. | d:n | ṡ:—:nd:np | d:n | ṡ:—:ṡ:— | ṙ : — | ṡ:—:n :d | p : d | p : m: g:r R |

Ch. | g : m | p:—:d : n | d:p | m: g:r:m | —: g | r:g : s | g:m | p:—:p:— |

| d : n | ṡ:—:r : r | g:m | g : ṙ:ṡ:ṡ | ṡ: — | n:d :p :d | n : d | p:m : g :r R |

THE REBELLIOUS HUSBANDMEN

VII. கலகப்புரி தோட்டக்காரர் சரிதை.

(கெட்ட தோட்டக்காரருவமை. லூக். 20: 9-16).

1. கதை வரலாறு.

இ-ம், மத்யமாவதி. ரூபகதாளம்.

பல்லவி.

கலகப்புரிவாழ் தோட்டக்காரர்
கதையை நாதன் நவின்ற விதங்கேள்.

அநுபல்லவி.

அலகிலாத கருணைக் கடவுள்
அவனி குருவா யெழுந்தநாளில் (க)

சரணம்.

அன்பி னிறைவால் நரரைமீட்க
ஆதரையருள் நாதனுதிக்க
வன்மனப்பவ மாந்த ரவரை
வையந் துறந்ததை யுவமித்துக் (க)

---

2. தோட்டத்தின் சிறப்பு.

இ-ம், தோடி. ஆதிதாளம்.

பல்லவி.

ஆகா நானென்ன சொல்லுவேன் - இந்த
வனத்தின் அழகினை.

அநுபல்லவி.

வாகாய் நறுமணமே மிக வோங்கும்
மலர்தரு மழகிய செடிகள் வனப்பும்
பாகோ இதன் சுவையென்னு முந்திரிப்
பழங்கள் விளையுங் கொடிகள் சிறப்பும் (ஆ)

சரணம்.

மல்லிகை முல்லை மலர்ந்த ரோஜா
மகிழ் பங்கஜ மிருவாக்ஷி சண்பகம்
நல்ல வாசமலர்ச் செடிகளும் வாழை
நாரத்தை மாதுள நற்பலா தேமா
பல்வகைப் பழந்தரு மரங்களுந் துலங்கப்
பகரொணு முந்திரி செடிகளமைத்துப்
புல்லர்கள் கலகப்புரியர்பா லளித்த
புகழரும் பூங்காவனத்தின் சிறப்பை (ஆ)

MADHYAMĀVADHI ($r^2g^2m^1d^2n^2$) $\frac{2.4.}{6}$ Vil. ka.

P.	R p : n | p:m: r:s	r : m | r:s :n:s	r :r | m:—:r:m	p : n | p :m:r:m Fin.
A.P.	ṡ : n | ṡ :ṙ :—:ṙ	ṙ : ṁ | ṙ:ṁ:ṙ:ṡ	ṡ : ṙ | ṡ : n:n:p	m : p | m: r:r:m R
Ch.	p :— | p:p : p : p	n : n | p:m:r:r	m:— | r : r:s:s	r :m | r:p:n: p
	ṡ :— | ṡ: ṙ:—:ṙ	ṁ:— | ṙ:ṁ:ṙ:ṡ	ṙ :— | ṡ : n:n:p	m : p | m:r : r:m R

THŌDI ($r^1g^2m^1d^1n^2$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

P.	R s.r:g$_k$: — : m | d:p.m | g$_k$:r.s	d.n:s : —:m.p | d.n:d.p | m.g:r.s Fin.
A.P	p :p :d.n :d.p | d: n.n | ṡ: ṡ	ṡ :ṡ.ṙ :—.ġ: ṙ.ṡ | ṡ :n.d | n :ṡ
	p :p.d:—.d: n.ṡ | ṙ: ṡ.n | d: p	ṡ :ṡ.n :—.n: d.p | d.n:d.p | m.g:r.s R
Ch.	d :d.d:—.d:d.d | d: n.d | d: p	p :d.d :—.d:d.d | d.n:n.d | d :p
	d :d.d:—.d:d.d | d: n.d | d:m	m:m.m:—.m:m.m | m:p.m | p :p
	p :d.n:—.ṡ: ṡ | ṡ : ṡ.ṡ | ṡ: ṡ	n : ṡ.ṙ :—.ġ: ṙ.ṙ | ṡ :n.ṡ | n : d
	p :d.n:—.ṡ:ṡ.ṡ | ṙ :ṡ n | d: p	d.ġ:ṙ.ṡ :—.n:d.p | d.n:d.p | m.g:r.s R

3. தோட்டக்காரர் துரோகம்.

இ-ம். ப்யாக். பல்லவி. ஆதிதாளம்.

உரிய பலனைத் தராமற் போனாரே!

அநுபல்லவி.

உயரு மதிபதிக்குத் தோட்டக்காரரே (உரி)

சரணங்கள்.

1. ஒப்பந்தப் படியவர் உறுதோட்டக் கனிகளை
யுவந்து தரவே மனமிசையாமல்
தப்பிதமாயவர் சொந்தமாக்கிக் கொண்டு (உரி)

2. அதிபதி கேட்க வந்திடுங்கா லவனை
அதஞ் செய்குவோமென வெதிர்த்து
சதிபணியே தம்மில் துரோகமினைந்து (உரி)

---

4. ஊழியன் பாகங்கேட்டல்.

இ-ம், காய்போதி. பல்லவி. ஏகதாளம் (அதீதம்).

தோட்டப் பலன் எங்கே - சொல்லும் வழியிங்கே!

அநுபல்லவி.

நாட்டிலதிகாரி - வாங்கிவர்ச் சொன்னாரிங்காள். (தோ)

சரணம்.

ஒப்பந்தமே செய்தும் வச மொப்புவித்த
உத்யானம் விளைந்த கனிகளின் பாகம்
இப்பாரில் நீவிர் தராமற்போன தேனோ
இன்றேனுந் தாரீ ரின்றேல் வருங் கஷ்டநஷ்டம். (தோ)

---

5. ஊழியனை அடித்துத் துரத்தல்.

இ-ம், சுருட்டி. (தில்லானா.) ஆதிதாளம்.

பல்லவி.

பாகந்தருவதில்லை போபோ - அடா!
பாகந்தருவதில்லை போபோ.

அநுபல்லவி.

ஆகா தூரத்தில் நில்லு
சாகாதபடி செல்லு. (பா)

சரணங்கள்.

1. பலன்தாருமெனச் சொல்லி வருகவும் நீயார்
பலனெமக் குரியது பிறருக் கிங்கேது
இல்லையதி பதிக்கென வெதிர்மொழி பேசில்
இந்நாளுயிர் துறப்பாய் சொன்னோமிது சரதம். (பா)

2. உனததிபதிக் கிங்கே சுதந்தரமில்லை
ஒரு சிறுபாகமுந் தந்திடோ மொல்லை
சினமுறப் பலமொழி புகன்றிடி லுன்னைச்
சின்னாபின்னம் புரிவோம் சொன்னோ மிதுசரதம். (பா)

Byāg ($r^2g^3m^1d^2n^3$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

P.	R s.ṡ:n².d:p.m:g.r	g.m : p.m	g_k : p Fin.	‖
A.P.	s.g:m.p :n.d:n.ṡ	ṙ.ṡ : n².d	p.m:gm.p. R	
Ch.	s :g.m :p.d:n.ṡ	ṙ.ṙ : ṡ.ṡ	n.d :n.ṡ	
	ṙ.ṡ: n.d :p.m:g m	d.p :m.pm	g_k : —	
	s.g:m.p :n.d:n².ṡ	ṙ.ṡ :n².d	p.m: gm.p R	

Kāmbōdhi ($r^2g^3m^1d^2n^2$) $\frac{4}{4}$ Vil. ka.

P.	R : p	d : ṡ : —:n	d : — : p:— Fin. ‖	m : p : g:m	p:d.p:—.m R }
A.P.	: ṡ	ṙ : ġ : —:ṁ	ġ : — : ṙ: ṡ	ṙ : ṡ : —:n	d : ṡ.n:—.d R }
Ch.	: p	p : d : —:d	d : — : d:p	d : ṡ · —:n	d : —: p :d
		p : m:—:d	m : — : p:g	m : p : —:d	ṡ : ṡ : — }
	: p	d : ṡ : —:ṙ	ġ : — : ġ: ġ	ṁ : ġ : —:ṙ	ṙ : —: ṡ :ṡ
		ṙ : ṡ : —:n	d : — : p:d	ṡ : — : n:d	p :m.g:—.m R }

Churutti ($r^2g^3m^1d^2n^2$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

P.	R r:m.p : p.p:d.p	m.p: m	—.m:r.s	r:m.p:p.p:d.p	m.p:m	—:— Fin.	‖	
A.P	n :ṡ.ṙ : ṡ.n :d.p	d_k :p.m	g.m:r.s R					
Ch.	p.p: p.p : n.n: ṡ.ṡ	ṙ.ṙ :ṡ.ṡ	n.n : ṡ	n.ṙ:ṙ.ṙ: ṙ :ṁ.ṙ	ṡ.ṙ:ṡ.ṡ	n.n: ṡ		
	p.p: n.n : ṡ.ṡ : ṙ.ṙ	ṡ.ṡ :n.n	p.n : ṡ	ṡ.r:—.ṡ:ṡ.n:d.p	d.p:—.m	g.m:r.s R		

6. ஊழியன் அதிபதியிடம் முறையிடல்

இ-ம், பரசு. (இந்துஸ்தான் நடை.) ரூபகதாளம். (அனுகதம்.)

பல்லவி.

பாதகத் தோட்டக்காரர் - பண்ணினதைக் கேளையனே !

அநுபல்லவி.

நீதிற்பலன் தாருமென - சேர்ந்தெனை யடித்தனரே. (பா)

சரணங்கள்.

1. ஆண்டவனுக் குரிய - அரும்பல னெங்கேயென
மூண்டுசினத்தா லெழும்பி - மூர்க்கமா யடித்தனரே. (பா)

2. பாகமேதடா வென்று - பாய்ந்து புலிபோல் வெகுண்டு
தேகமுதிர மொழுக - சேர்ந்தவ ரடித்தனரே. (பா)

3. தோட்ட மெமக்குரிது - சொந்தக்கார னென்றுசொல்லி
மீட்டொருவன் வந்தாலுயிர் - வீட்டிவிடுவோ மென்றனர். (பா)

---

7. வேறு ஊழியரை யனுப்பல்.

விருத்தம்.

மூர்க்கமிக நிறைந்தூழி யனையடித்த பொல்லாத மூடர் தம்மைப்
பார்க்குளழித் திடவெண்ணு திரங்கிப்பின் னும்நன்மதி பகரவென்று
தீர்க்கமதி யூழியரைத் தானனுப்ப அவரையுமே செய்தார் பங்கம்
ஆர்க்குமிணங் காவிடினு மகற்களிப்ப ரென்றிறைவ னனுப்பினனே!

---

8. குமாரனை யனுப்பல்.

இ-ம், காம்போதி. பல்லவி. ஆதிதாளம்.

மகனே நீ போய் வருகுவாய் - அப்பா என்—

அநுபல்லவி.

அகமே கருவித்த - கலகப்புரியார்பால் (ம)

சரணங்கள்.

1. பாகங்கேட்ட தூதரை நோக வடித்தனரே
ஏகனீயே சென்றக்கால் வாகாய்த் தருவார். (ம)

2. விட்டதோட்டப் பலனைக் கெட்ட குணத்தாலவர்
சட்டமாகத் தாமல் கட்டந்தருகின்றார். (ம)

---

9. குமாரனைக் கொலைபுரிதல்.

இ-ம், மோஹனம். பல்லவி. ரூபகதாளம்.

எழுந்திருங்களடா - துணிந் - தெழுந்திருங்களடா !

அநுபல்லவி.

இதோ சொந்தக்காரனே வருகின்றான். (எ)

சரணங்கள்.

1. வையமிவனை நாம் மாய்த்துயிர் போக்குவோம்
வாருங்கள், சேருங்கள், பாருங்கள் - இப்போதே. (எ)

2. சொந்தக்காரன் போனல் தோட்டம் நம்மதாகும்
சொல்லுவோம், கொல்லுவோம், வெல்லுவோம் - இப்போதே. (எ)

3. வந்த இவனை நாம் மலங்கப் பிடித்து
வாட்டுவோம், மாட்டுவோம், நீட்டுவோம் - இப்போதே. (எ)

PARASU ($r^1g^3m^1d^1n^3$) $\frac{2.4.}{6}$ Vil. ka.

P. | R : | s: —:g:m | d: — | p:m:g:— | m: — | p:m:g:— | m:g | r :r:s :— Fin. ||
A.P. | : | p: p:p:d_k | ṡ:— | n:d :p:— | d : — | p:m:g:— | m:p | m:g:r : s R |
Ch. | : | p: p:d:— | ṡ:— | ṡ:n:ṡ :— | : | ṡ:ġ:ṁ:ṁ | ġ:ġ | ṙ:ṙ:ṡ :— |
| : | d :d: ṡ: ṡ | n: — | d:p :p:— | d :— | p:m:g:— | m:p | m:g:r:s R |

KĀMBŌDHI ($r^2g^3m^1d^2n^2$) $\frac{4.2.2.}{8}$ Vil. ka.

P. R : p.d | ṡ : n.d : p.m : g.rg | s : —.r | g.m : p.d |
| ṡ : n.d : p.m : g.rg | s : — | — : — Fin. ||
A.P. | r : g.m : g.m : p.p | d : p.d | s.n.d : R }
Ch. | m : g.m : p.p : d.p | d_k : p.d | d.ṡ :n.d |
| ṡ : ṙ.ṡ : n.d : p.d | ṡ : n.d | p.m : R }

MŌHANAM($r^2g^3m^1d^2n^2$) $\frac{2.4.}{6}$ Mad. ka.

P. | R s : r | g : r : s : d | 1st s : — | —:— : r: s R || 2nd s:— | —:—:—:— Fin. ||
A.P. | d : ṡ | ṡ : d : d : p | g.g: d | p : g.g : r: s R |
Ch. | g : g | g : p : p : p | d : d | d : ṡ : ṡ: s |
| 1st. ṙ : — | ṙ : $ġ_k$:—:— | ṙ : — | ṡ : $ṙ_k$:—:— | ṡ:— | d : ṡ : —:— |
| 2nd. ṙ : ġ | ṙ : ṡ : r : ṡ | d : ṡ | d : p : g : r R |

THE STORY OF THE DIVINE PHYSICIAN

VIII. பரம வைத்தியன் சரித்திரம்.

(பெதஸ்தா குளம். யோவா. 5: 1-9.)

1. நோயாளிகள் வருதல்.

இ-ம், சரசாங்கி. பல்லவி. ஆதிதாளம்.

நோயாளிகளோர் பெருங்கூட்டமதாய்
நொந்து சுகம்பெற வந்தனரே.

அநுபல்லவி.

ஆயா வதிசய குளத்தினை நாடி
ஆவலுடனே யுருண்டு திரண்டோடி (நோ)

சரணங்கள்.

1. தீராப் பிணியால் சிந்தைவாடினரும்
திரிந்தவிழ்தம் பல தேடினரும்
பூராய் நாளும் பாயில் நீடினரும்
போக்கற்றுத் துயர் மூடினரும்
ஊரார்ந்த பல நோயினர் யாரும்
ஊனர் முடவர்களான பேரும்
பாரார் தீனர்களு மெளியோரும்
பரிதாப ஸ்திதியுள்ள வெல்லாரும். (நோ)

2. மாவாதைக ளுற்றவரும் வந்தார்
மண்டபங்களில் விழுந்துகிடந்தார்
நோவாற் பலநாள் படுக்கையில் நொந்தார்
நொந்து வருந்திக் காத்திருந்தார்;
தேவதூதன் குளத்தினி லிறங்க
திருக்குள மந்தச் சமயங்கலங்க
மேவியதிற் குளிப்போர் பிணிவிலங்க
மெய்ச்சுக மடைவர் என்பது துலங்க (நோ)

---

2. குளங் கலங்குதல்.

இ-ம், அடாணா. பல்லவி. திரிபுடை தாளம்.

வானதூதன் வந்து கலக்கினனே - அதி
வளமுடனே நலமுடனே - ஒரு

அநுபல்லவி.

தீனர் சுகமுறவே பெதத்தா
வானகுள மதனைத் திறத்தால் (வா)

சரணம்.

தேங்கியிருந்த நீர் குபுகுபெனப் பொங்க
திரைகளொடு ஜலம் பெருகிக் கலங்க
ஓங்கு நோயினர் முதலிற் போயிறங்க
ஒழியாப் பிணியதுகள் மலங்க
அழியாச் சுக நொடியிற் றுலங்க. (வா)

Sarasāṅgi ($r^2g^3m^1d^1n^3$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

P. | R p:p.p:m :m.m | g_k : g.g | r_k : r_k | s : ṇ.ṇ : s : r.r | g.m : g.r | s : — || Fin.

A.P. | p:d.d:n d:p.m | p.d: n.n | $ṡ_k$: ṡ.ṡ | $ṡ_k$: ṡ.ṡ :n.d:p.m | p.d :p.m | g.r:g.m | R

Ch. | R p:p.p:m :m.m | g_k : g.g | r_k : r_k | s : ṇ.ṇ : s : r.r | g.m: g.r | s : — |

| p:d.p:m :m.m | g_k : g.g | r.s:r_k | s : ṇ.ṇ : s :r.r | g.m : g.r | s : — |

| p:d.d:n.d:p.m | p.d: n.n | ṡ : ṡ | n : n.n :ṡ.ṙ:ṡ.ṙ | ġ.ṁ : ġ.ṙ | ṡ.n: ṡ |

| p:d.d: n : ṡ.ṡ | n.n: ṡ.ṡ | n.d: p | m:g.m:m.m:d.d | p.d :p.m | g.r:g.m | R

Aḍāṇā ($r^2g^3m^1d^2n^3$) $\frac{3.2.2.}{7}$ Vil. ka.

P. | R ṡ :— : n | p : — | d :— | m : — : p | m : g | m : p |

| d_k :— :— | — : — | n : ṡ | n:d.n^2:p | p : d.n^2 | p : m.p | Fin.

A.P. | ṡ : ṡ :ṙ.ṡ | ṡ : n ṡ | d.n^2:ṡ | n : ṡ :n^2.d | n : d.p | m.p: d | R

Ch. | ṡ : ṡ : n | d : n^2 | d : p | m : p : m | g : m | r : s |

| m : —: g | m : — | r : s | r: —:m | p : n | d : p |

| p : n : d | n^2 : — | ṡ : ṡ | ṙ : ṁ : ġ | ṁ : ṙ | ṙ : ṡ |

| ṡ : ṡ : ṙ.ṡ | ṡ : n.ṡ | d.n : ṡ | n : ṡ : n.d | n^2 : d.p | m.p : d | R

3. முடவன் புலம்பல்.

இ-ம், யாஞ்சி. ஆதிதாளம்.

பல்லவி.

கடைவிழிபார் கருணாநிதி
கனதுயர் தீர்த்தாளா யித்ததி!

அநுபல்லவி.

உடையானே ஓதயை வாரியே!
உள்குவோர்க் கென்று முபகாரியே! (க)

சரணம்.

ஏழை கதியில்லான் நான் புவிமீதே
எனைப் பெருமானே நீ கைவிடாதே
பாழுங் கொடுரோகம் நீங்குத லெப்போதே
பகவானீ யன்றிப் புகலெனக் கேதே. (க)

---

4. பரமவைத்தியன் வருதல்.

இ-ம், மோஹனம். பல்லவி. ஆதிதாளம்.

பரம வைத்தியன் பரிவா யெழுந்தனர்—
பவவினை தீர்க்கும் - துயர்நீக்கும்

அநுபல்லவி.

தருமமேபுரியும் தயையொடு திரியும்
பிரபஞ்சத்தின் துயர் பிணிகளையரியும் (ப)

சரணங்கள்.

1. அன்பர்கள் நாட அனந்தம்பேர் கூட
துன்பங்க ளோட - துதிபலர் பாட (ப)

2. ஏழைகட் குருகி - யெழிலன்பு பெருகி
தாழிலாப் பெருமை - சார்குளத்தருகில் (ப)

3. உரோகியைக் கண்டா - ருளமிக நைந்தார்
தேகசுகம் வேண்டு - மோ வெனப்பகர்ந்தார். (ப)

---

5. முடவன் மொழிதல்.

இ-ம், உசேனி. பல்லவி. ரூபகதாளம்.

கொண்டுபோயெனை விடுவாரில்லையே - குளங்கலங்கையில்
கொண்டுபோயெனை விடுவாரில்லையே.

அநுபல்லவி.

அண்டிய நோயினு லாண்டு முப்பத்தெட்டாய்
அந்தோ சுகம்வரக் காத்துக் கிடக்கின்றேன். (கொ)

சரணம்.

நகர்ந்து நகர்ந்து நான்செல்லு முனமே
நண்ணிப் பலர்ஆ ரோக்யம் பெறுகின்றார்
சுகமுனக்கு வேண்டுமோ வெனவென்பாய்
தூயமனதுடன் கேட்ட போதகரே. (கொ)

MĀNJI ($r^2g^2m^1d^1n^2$) $\frac{4.2.2.}{8}$ Vil ka.

P. | R r.r : g.m : p : — | m.g : m.p | g : r.s |
| g.r : s.ṇ : ḍ.ṇ : ṣ | r.g : mg.m | g_k : r.s Fin. ||

A.P | p.n ; d.n : ṡ.ṙ : ṁ | ġ.ṙ : ṡ. | n_k : d.p |
| n.d ; n.p : ṡ n.n d : d.p | m.g : m.p | g_k : r.s R |

Ch. | ṡ.n : d.n : p : m | g.r : g | m.g : r_k |
r.s : ṇ : ḍ.ṇ : ṣ	ṇ.s : r	g.m : g.r
p.n : d.n : ṡ : ṙ	ṁ.ġ : ṙ.ṡ	n_k : d.p
n.d ; n.p : ṡn.nd : d.p	m.g : m.p	g : r.s

MŌHANA ($r^2g^3m^1d^2n^2$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

P. | R g.p:–.gr:sr.g:–.rs | s.r:–.sḍ | s:— Fin. || g_k :g.g:p.d: p | d_k:p.g | p : gr.sr R |

A.P. | g_k: g.g :.p :d.p | g.p:d.ḋ | ṡ:d.p | d :ṡ.ṡ:d.ṡ :d.p | d_k:p.p | d.p:gr.sr R |

Ch. A.P.

UCHĒNI ($r^2g^2m^1d^2n^2$) $\frac{2.4.}{6}$ Vil. ka.

P. | R r:— | g:m:p:— | m:— | g:r: g :r | s:— | —:—:ṇ:s | r :g | m: g: r: ṡ |
| r:— | g:m:p:— | m:— | g:r: g :r | s:— | —:—:—:— Fin. ||

A.P. | p: n | d:n :ṡ : ṡ | p : n | n:ṡ:—:ṡ | ṡ: ṙ | ṡ : n:d:p | m : p | m: g: r: s R |

Ch. | p:— | n:d :p :m | n : d | n:ṡ:—:ṡ | n: d | n :ṡ:ṙ:— | ṡ :— | n : d: p:— |
| p:— | p:n :d:n | ṡ : ṙ | ṡ:n:d:p | ṡ:— | n :n :d:p | m : p | m: g: r: s R |

6. இரக்ஷகர் சுகமளித்தல்.

இ-ம், தேவகாந்தாரி. ஆதிதாளம்.

பல்லவி.

சுகமளித்தேன் உனக்கே - யின்று
சுகமளித்தேன் உனக்கே!

அநுபல்லவி.

சுகம்பெற வென்றே துணிந்து பல்லாண்டாய்
அகமிக நொந்திங் கயர்ந்த நோயாளியே (சு)

சரணம்.

பாயை விட்டெழுந்து நீ பலத்துட னிற்பாய்
பட்ட கஷ்டங்க ளெல்லாந் தவிர்ப்பாய்
நோயிதோ பறந்ததுன் படுக்கையை யெடுப்பாய்
நுவலநின் வீடதை நோக்கி நடப்பாய். (சு)

---

7. சுகம் பெற்றவன் கடவுளைத் துதித்தல்.

இ-ம், ஸ்ரீராகம். பல்லவி. ஆதிதாளம்.

துதிசெய் ஓ மனமே! சரணுகதனை
இரக்ஷண்யவரதனை.

அநுபல்லவி.

துதிசெய் துதிசெய் சுர சேவித பாதனை
அதிசயனெனுங் கிறிஸ் தமல விநோதனை. (து)

சரணங்கள்.

1. நடலைப் பவப்பிணி யடியொடு புவி தூற
—நனிபெருகிய துயர்க்கடல்
நாளுங் கடந்ததி லிறனெடு கரையேற
உடலமாதி நசைப் பழவினை பாற
ஊர்த்த நெறிபுகுந்து மனமது மாற (து)

2. கருணாலய சரணம்புய வந்திதனை
—காசினி யெலாமகிழ் தரு
கமலாக்ஷ தெய்வீக ரக்ஷணிய புனிதனை
அருணிறை தருகுரு பரத் திருச்சுதனை
அன்பர்க ளடிதொழு மமல சரதனை (து)

DĒVAKHĀNTĀRI ($r^2g^3m^1d^2n^3$) $\frac{4.2.2}{8}$ Mad. ka.

P. | R
d.ṙ : ṡ.ṡ : d.d : p.m | m.p : d_k | p.m : r.r |
| s.r : s.ḍ : s.r : m. p | m.g : r | s : — Fin. ||

A.P. | p.m : p.d : ṡ.ṡ : ṙ.ṙ | ṡ.ṙ : ġ.ṙ | ṡ.d : ṡ.ṡ |
| d.d : ṙ.ṡ : d.d : d.p | d.ṡ : d p | R mg.r:mp.d |

Ch. | d : d.p : p.m : r.r | s.r : g.r | s.ḍ : s.s |
ḍ.s : r.r : r.m : g.ṙ	p.m : r.r	m.p : d.dp
d.d : ṡ.ṡ : ṙ.ṁ : ġ.ṙ	ṡ.d : ṙ.ṡ	d.d : ṡ.ṡ
d.d : ṙ.ṡ : d.d : d.p	d.ṡ : d.p	R mg.r:mp.d

SRĪRĀGAM($r^2g^2m^1d^2n^2$) $\frac{4.2.2}{8}$ Mad. ka.

P. | R
s.r : $ṇ_k$:— : s | r_k : r_k | r : m.r | Fin.
g.r: s :— : p | n : p.m | p.m : r ||

A.P. | p :p.p :n :p.m | p : n.n | ṡ : ṡ | ṡ.ṙ:ṡ.n:n.p:d.n | ṡ.n:p.m | R r.g : r.s |

Ch. P.(twice) + A.P.

THE STORY OF THE LITTLE DEVOTEE

IX. குறு தொண்டன் சரிதை.

(சகேயு சரித்திரம் லூக். 19: 1-10).

1. இரக்ஷகர் ஜெரிகோ விஜயம்.

இ-ம், செஞ்சுருட்டி. பல்லவி. ஆதிதாளம்.

ஜெரிகோ நன்னகர்க் செம்பெருமான்
சிறந்தெழுந் தருளிய சேதிகேளீர்.

அநுபல்லவி.

உரியநற் ருெண்டர் - உளமகிழ்ந் துறவும்
உகைையினுற் றிரள் - ஜனம் பின்தொடரவும் (ஜெ)

சரணங்கள்.

1. பிணிபல நீங்கவே - பெற்றவர் வாழ்த்த
பேரருட் குருவெனப் - பலர்சிரந் தாழ்த்த (ஜெ)
2. நன்மைசெய்து திரியு - நற்பதம் நோக
நரர்துய ரறும்படி - மிக மகிழ்வாக (ஜெ)
3. ஆரவார மிக - வணிநக ரெழும்ப
அன்பெனுந் தீயினல் - பலர்மனம் வெதும்ப. (ஜெ)

---

2. தொண்டன் இரக்ஷகரைக் காண விழைதல்.

இ-ம், உசேனி. பல்லவி. ரூபகதாளம்.

கண்டு களித்திடுவேன் - இந்தக்
காசினிதனி லெந்தன் கண்ணுர.

அநுபல்லவி.

எண்டிசையும் புக ழிலங்கு நாதனைத்
தொண்டர் பரவுநற் சுந்தரப் பாதனை (க)

சரணங்கள்.

1. அற்புதம் பல புரியும் வல்லானை
அன்பர்க் கனுக்ரகஞ் செய்யு நல்லானை
வெப்பும் பிணிதீர்க்குந் திவ்விய சொல்லானை
மேதினி யார்க்கும் விகற்ப மில்லானை (க)
2. தீனர்க்கிரங்கு மொப்பில்லாத நேயனை
தேடரும் புருஷோத்தம சகாயனை
ஞானம் பொழியு மாதுரிய வாயனை
நற்றவர் நாளுங் கொண்டாடுந் தூயனை (க)

---

3. தொண்டன் மரத்தி லேறுதல்.

இ-ம், கரஹரப்ரியா. (பார்வதிநடை.) ஏகதாளசாபு. (அதீதம்).

பல்லவி.

மிக விரைவுடன் அதி துணிவுட னுயர் மரந்தனில்
மேவியவன் ஏறினன் -

CHENCHURUTTI ($r^2g^3m^1d^2n^2$) $\frac{4.2.2.}{8}$ Vil. ka.

P. | R p.m : g : r : s | n.s : r.s | n.d : p | d : s.r : gk : g.m | p.m : g | r : sr.gm Fin. |

A.P. | m : g.g : m.m : p | m.g : m.p | m.g : r.g | gk : g.g : g.r : g.m | p.m : g | r : sr.gm R |

Ch. A.P.

UCHĒNI ($r^2g^2m^1d^2n^2$) $\frac{2.4}{6}$ Vil. ka.

P. | R s : r | g : m : g : r | Fin. s : — | — : — : s : r | n : r | m : p : d : p | p : — | m : g : r : s R ||

A.P. | p : n | d : n : p : m | n : d | n : ṡ : ṡ : ṡ | p : ṡ | n : d : p : m | m : p | m : g : r : s R |

Ch. | r : g | m : g : r : s | r : g | m : p : — : p | p : n | d : n : d : p | n : d | n : ṡ : — : ṡ |

| p : n | d : n : ṡ : ṙ | ġ : ṙ | ṙ : ṡ : — : ṡ | ṡ : ṙ | ṡ : n : d : p | m : p | m : g : r : s R |

KHARAHARAPRYĀ ($r^2g^2m^1d^2n^3$) $\frac{4}{4}$ Dri. ka.

P. R p : p | p : p : d : p | m : m : p : m | g : m : g : g | r : r : s : n |

| s : — : r : g | m : — : g : r | s : — : — : — | — : — : Fin. }

அநுபல்லவி.

ஏறினன், ஏறினன், ஏறினன் - அருள்
மிகுந்த சற்குரு நாதனைக் காண நல்
விழைவினு லுளமே நெகிழ்ந்து (மி)

சரணம்.

சேர்ந்த ஜனக்கூட்டத்தைப் பிரித்துக்
சிறுவன்போலத் துள்ளிக் குதித்து
திறமுடன், உரமுடன், விரைவுடன் - தனின்
சிந்தைகனிந்துநல் விந்தைசற்குருவின்
சொந்த முகத்தைக் கண்டு களிக்க. (மி)

---

4. இரக்ஷகர் அழைத்தல்.

இ-ம், தேசிக கமாஸ். பல்லவி. திஸ்ர ஏகதாளம்.

என்னைத் தேடின நல்லன்பா
இறங்கி நீ வருவாய்.

அநுபல்லவி.

மன்னிய குறு தொண்டனே
மரத்தினி லிருந்தே (எ)

சரணம்.

இன்றைக் குந்தன் வீட்டில் தங்க
யான் விரும்பினே னப்பா
நன்று தெரிந்தாய் நற்பங்கை
நண்பனே நீ வருவாய். (எ)

---

5. தொண்டன் இரக்ஷகர் திருவடியிற் பணிதல்.

இ-ம், கமாஸ். பல்லவி. ஆதிதாளம்.

சாரச மதுமலரடி சரணம் - தருமப்ரபு நினது
சாரச மதுமலரடி சரணம்.

அநுபல்லவி.

பாரடர்ந்தபவ - சூர்தவிர்ந்ததயை
வாரி தீரவுப காரியே நினது (சா)

A.P. s : r | m : — : — | — : r : m | p : — : — | — : d : m |
| p : — : — | — : }

p : p | ṡ : ṡ : ṡ | n : n : d | p : p : p | m : m : m |
| g : g : r | g : m : p | m : g : r | R s : }

Ch. r : — | m : m : m | m : g : m | p : d : m | p : — : — |
| p : p : p | p : d : p | m : g : r | s : }

: | p : p : p | ṡ : — : — | ṡ : ṙ : ġ | ṙ : — : — |
| ṁ : ġ : ṙ | ṡ : — : — | — : }

ṡ : ṡ | ṡ : ṙ : ṡ | n : d : n | d : n : d | p : d : p |
| m : p : m | g : r : g | m : g : r | R s : }

DĒSIKA KHAMĀS (r²g²m¹d²n²) 3/3 Mad. ka.

P. | R s : — : g | g : — : m | p : — : m | p : d : n |
| ṡ : — : n | d : — : p | m : p : m | g_k : — : — Fin. ||

A.P. | ṡ : — : ṡ | ṡ : — : ṙ | ṡ : — : n | d : p : d |
| ṡ : — : n | d : p : m | p : — : m | g_k : — : — R |

Ch. P. + A. P.

KHAMĀS (r²g³m¹d²n²) 4.2.2/8. Mad. ka.

P. | R ṡ : — : — : ṡ.n | n.d : d.p | p.m : g.g | 1st time m : — : — : m.g | m.n : d.n | R d.p : d.n |
| 2nd time m : — : — : — | g : — | Fin. s : — ||

A.P. | p : g.m : p.p : m.g | m.n : d.n | ṡ : n.ṡ | ṙ : ṡ.ṡ : — : n : d.n | ṡ.n : d.p | R m.p : d.n |

சரணங்கள்.

1. நறுமண முறுமருள் மொழியொழுகு மதுரவாயா - நேயா
ஞாலமீது மிடிநீடு மாதுலர் சகாயா
அறருண விதரண ககன புவன கன
ஆரணு சகல காரணு நினது (சா)

2. அதியுனத உஜித கஜித விபுதர்பணி பாதா - வேதா
ஆன்மகோடிக ளெலாஞ் சரண்புகு ஜகநாதா
துதியுல வியசுபகர சுஜனவஜன
தூயனே பரம நாயனே நினது (சா)

---

6 இரக்ஷகர் தொண்டன் வீட்டிற் கெழுந்தருளல்.

இ-ம், மோஹனம். ஆதிதாளம்.

பல்லவி.

வீட்டுக் கெழுந்தருளினுர் - குறுதொண்டன்தன்
வீட்டுக் கெழுந்தருளினுர்.

அநுபல்லவி.

வீட்டினுக்குடைய விமல ப்ரசாதன்
தேட்ட மனத்தினரைத் தேடுஞ் சுபோதன் (வீ)

சரணங்கள்.

1. அருமை பெருகு திருத்தொண்டர்கள் நாட
ஆனந்தப் பரிதரா யனந்தம்பேர் நீட
பெருமையாகப் பலபேருங் கொண்டாட
பேருவகையால் குறுதொண்டன் கூத்தாட (வீ)

2. பாவிக ணேசனென் றண்ணலைப் பேச
பகைஞராகிய வேத பாரக ரேச
ஆவலுடனே குறுதொண்டனு ளீச
அடிமையென்று கிட்டிச் சேரவுங் கூச (வீ)

---

7. தொண்டன் பாவ அறிக்கை.

விருத்தம்.

பாவிகள் தம்மைத் தேடிப் பாருல கெழுந்த நாதன்
ஆவலாய்த் தம்பா லுற்ற அடியருக் கடியான் வீட்டின்
மேவியே யுறவுந் தொண்டன் மெய்யுணர் வதுசு ரந்து
தாவிலா தனது பாவந் தனையறிக் கைசெய் வானே!

இ-ம். தன்யாசி. பல்லவி. ஆதிதாளம்.

திருவடியே அபயமையா
திருவருள் புரிகவே சமயமெய்யா!

Ch. | d :d.d:d.d:d.d | d.d:d.d|d.d:d.d | p.d:n:— : p | d : —| — :d.p |
| ṡ :ṡ.ṡ :ṡ.ṡ :n.d | d :d.p|p.m:p.d | n : d : —:p.g | m : —|— : — |
| m;g.m:p.p:p.m| n :d.n| ṡ :ṡ.ṡ | ṙ.ġ:ṙ.ṡ:n.ṙ:ṡ.n| d.ṡ:n.d|m.p:d.n | R

MŌHANA ($r^2g^3m^1d^2n^2$) $\frac{4.2.2}{8}$ Mad. ka.

P. | R s.r :g.r : s.ḍ : s.r |g_k :—.g|d.p : g.r |
| s.r :g.r : s.ḍ :sr.gp| r_k: — | s : — || Fin.

A.P. | d.dṡ:,ṡ.ṙṙ:ġ.ṙṙ ;ṡ.ṡ|ṙ.ṡd:,ṡ.dp|g.gp:r.rs | R

Ch. | g.gg :,g.rr:g.pg:r.r| s.rg:,r.sḍ|s.rg :p.p |
| d .dṡ:,ṡ.ṙṙ:ġ.ṙṡ:d.ṡ|ṙ.ṡd:,ṡ.dp|g.pg :r.s | R

TANYĀSI ($r^1g^2m^1d^1n^2$) $\frac{4.\ 2.\ 2.}{8}$ Vil. ka.

P. | R p.n : ṡ.n : ṡ : — | n.d : p.m | g_k : — |
| m.n : d.p : m.g : m.p | m.g : r.ṇ | s : — || Fin.

அநுபல்லவி.

குருபரனே - சுரநரனே - நரனருட் கதிபெற
நலமாகவே - நிலமெழு - முனதிரு (தி)

சரணங்கள்.

1. நலமறியேன் - நிலைதெரியேன்
புலைதொழிற் பயிலுவதிலே பெரியேன்
சிலையனையேன் - கொலைவினையேன் - தேடரும் பரமனே
திருவேகன - மிகுபூஜிதி - வுனதிரு (தி)

2. இடர் புரியேன் - கடைசிறியேன்
படியனியாய பொரு - ளினி யெறிவேன்
மிடிதவிர்ப்பேன் - கொடையளிப்பேன் - விமலகுழாம் வந்தித
மிகுகாருண - தயையாரண - நினதிரு (தி)

---

8. இரக்ஷகர் இரக்ஷண்யங் கூறல்.

இ-ம், பரசு. பல்லவி. சாபுதாளம்.

இன்றே யிரக்ஷண்ய மிவ்வீட்டில் வந்ததே ! ஆ !

அநுபல்லவி.

என்றூழியான பாக்கியம் நீ யன்பனே
இன்றே இன்றே இன்றே இன்றே
இன்றே பெற்றாய். (இ)

சரணங்கள்.

1. நரரைத் தூக்கவுமே - ரட்சிப் - பதை யுண்டாக்கவுமே - ஆ
துரரைக் காக்கவுமே - அவர் - துயரை நீக்கவுமே
வந்தேன் வந்தேன் வந்தேன் வந்தேன்
வந்தேன் வந்தேன். (இ)

2. குற்றமதை நினைந்தாய் - அதைக் - குறித்து மனநொந்தாய் - அருள்
பற்றினை யடைந்தாய் - தேவ - பக்தனுய்ச் சிறந்தாய்
இன்றே இன்றே இன்றே இன்றே
இன்றே பெற்றாய். (இ)

A.P.	p.n : d.n : d̄ : p.m	p.p : n.d	n_k : n.ṡ	
	p.n : ṡ.ṡ : n.d : pn.ṡ	pn.ṡ : nd.pn	d.pp:mg.mp (R)	

Ch. P + A.P.

PARASU ($r^1g^3m^1d^1n^3$) $\frac{7\ (3.4)}{7}$ Vil. ka.

P.	(R) s : — : — : g : —: m—	p : d : — : n : — : ṡ : —
	n : — : — : d : —: p:—	m : g : — : m : p : m : g
	g : — : — : —:—:—:—	g : m : p.m : g : — : r : s (Fin.)
A.P.	m : — : — : g :—:m:—	d : — : — : n : — : ṡ : —
	ṡ : — : — : n :—: d:—	p : — : — : m : — : g : —
	—: — :— : — :—:—:m	p : — : — : — : — : p : m
	g : — : — :— :—:m:—	p : — : — : n : d : p : m
	g : — : — :— :—:—:m	p : — : — : m : g : r : s (R)
Ch.	p : — : d : p :—:m:m	g : — : — : — : — : g : m
	p : p : d : p :—:m:m	g : — : — : — : — : m : p
	p : p : d̄ : p :m : g:m	g : — : — : — : — : m : p
	p : p : d̤ : p : m : g:m	g : — : — : — : — : — : m
	p : — :— : d : — : p:m	g : — : — : — : — : m : —
	p : — :— : n : d : p :m	g : — : — : — : — : — : m
	p : — :— : m : g : r : s (R)	

THE STORY OF THE FLOOD.

X. ஜலப்பிரளயம்.

(நோவா சரித்திரம். ஆதி. 6⁹-8²²)

1. பூமியில் அக்கிரமப் பெருக்கம்.

இ-ம், பிலஹரி. மிஸ்ர ஏகதாளம்.

பல்லவி.

உலகமழிந்த சேதிகேள் - பூர்வம் ஜலத்தால்
உலகமழிந்த சேதிகேள்!

அநுபல்லவி.

அலகைபோல் பல மானிடர் - அக்ரமம் புரியவும்
ஆரணன் காரணன் - அனைத்துயிரு நிர்மூலஞ்செய்யவும் (உல)

சரணங்கள்.

1. கொடுமைமிகவும் பெருகிற்றே - பல - குடிகள் தீமை பரவிற்றே
கடுமொழியும் லௌகீகப்பற்றும் - கதித்துப்பக்தி யொருவிற்றே
நடுவுநீதி யகன்றனர் - நாசவழியிலே சென்றனர்
ஞாலஞ்சிற்றின் பத்தராயக் - காலமனித ருழன்றதாலிவ் (வுல)

2. தெய்வந்தனையே மறந்தனர் - பல - தீயநெறியிற் புகுந்தனர்
வையகபோகத்தை விழைந்து - வல்வினைகள் பலபுரிந்தனர்
ஐயனருள நொந்தனர் - அவனியழிப்போ மென்றனர்
அவ்விதம் ஜலப்ரளயத்தையிவ் - வாதரை வருவிக்கவே இவ் (வுல)

---

2. நோவனுக்குண்டான தேவ எச்சரிப்பு.

இ-ம், சுருட்டி. பல்லவி. ஆதிதாளம்.

பத்தா நீதியின் மார்க்கனே அன்ப நான்
பகருரை நீ கேளாய் - இந்த - ஜகமழிப்பேன் பாராய் - எனது

அநுபல்லவி.

இத்தரை பாவ மெத்தவு மாச்சு - எழிற்சேர் நீதியின் மார்க்கமே போச்சு
நித்தம் பொல்லாப்பாச்சு - பூமி - நிலைக்காதே யேச்சு - எனது (ப)

சரணங்கள்.

1. பொல்லா வுலகந் தனை நிர்மூலம்
புரிந்தே யழித்திடுவே னிக்காலம்
நல்லாய் கேள் சீலம் - இழந்த
நரர்க்குத் துர்க்காலம் - எனது (ப)

2. பெரியதோர் கப்பலை யுனக்குண்டாக்கு
பின்னால் வருந்துன்பத்தினை நீக்கு
உரியவரைக் கைதூக்கு - இந்த
உலகினர்க் கிலைபோக்கு - எனது (ப)

3. மெய்ந்நெறியிகந்த அன்னாரிடஞ் செல்லு
வேதன் திருவுளமதனை நீ சொல்லு
உய்வழிதனை விள்ளு - எந்தற்
குரியதொண்டனாய் நில்லு - எனது (ப)

BILAHARI ($r^2g^3m^1d^2n^3$) $\frac{7.(3,4)}{7}$ Mad. ka.

P. | R ṡ :n :–:d:–:p:m | g:r:– :g:p.m:g. | r:—:—:—:—:s:— | r: g :—:p:—:d:n |

| ṡ :n :–:d:–:p:m | g:r:—:g:p:m:g | r:—:—:—:—:— | s:—:—:—:—:– Fin. ||

A.P. | m:g:g:p:—:d:p | ṡ :n:d:ṡ:—:ṡ:ṡ | d:—:ṡ:ṙ$_k$:—:—:— | ġ:—:ṙ:ṡ:-:—:— |

| d:n:ṡ : ṡ:—:ṙ:ṡ | ṡ:—ṡ:n:—:d:p | ṡ: ṙ :ṡ: ṡ: n: d :p | m:g:—:p:—:d:n R |

Ch. | p:d:p :p:p:ṡ:— | n:d:p:m:g:r:— | g:m:g: r: g : r : s | m:g: g :p:d:p:— |

| p:d:p : ṡ:ṡ :ṙ: ṡ | ṡ :ṙ:ṡ :n:d:p:— | p: ṡ :— : n:d:p:— | g :p:m:g:r :s :—. |

| p:—:p:p:p:d:p | ṡ :–:ṡ:ṡ:–:—:— | ṡ :—: r : ṡ:—:n:n | n :—:d:p:–:—:— |

| d:—:n:ṡ:ṙ : ṡ:n | n:–:d:p:–: ṡ : ṡ | ṡ :—: n :d:—:p:m | r : g:—:p:—:d: n R |

CHURUTTI ($r^2g^3m^1d^2n^2$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

P. | R r : m : p : ṡ.ṡ | ṡ:n.d | p:m.p | p.n:d.p:—.m:g.m | r : — | m :p |

| p.n:d.p: —.m:g.m | r:–.m | g.m:r.s Fin. ||

A.P. | p : p.p: n : ṡ | ṡ:n.d | n.ṡ: ṙ | ṡ :n.d:n.ṡ :ṙ.ṡ | ṡ.n:d.p | n d:p |

| p.n:d.p:p.m :g.m | r: — | m : p | p.n:d.p:p.m :g.m | r :–.m | g.m:r.s R |

Ch. A.P.

3. நோவன் பிரசங்கம்.

இ-ம், மோஹனம். அட—தாளசாபு.

பல்லவி.

எச்சரிக்கை ஜனமே - அழிவுவரும்
இன்றே திரும்புமனமே!

அநுபல்லவி.

துச்சப் பவக்கொடுமை தொல்லுலகிற் பெருக
இச்சகத்தை ஜலத்தா - லிறைவ னழிக்கப்போருர். (எ)

சரணங்கள்.

1. சன்மார்க்கமொடு பக்தி தரணி கிஞ்சித்துமில்லே
சமஸ்தஜனமு மீறினுர்கள் கடவுள் சொல்லே
துன்மார்க்கநெறி நீங்கித் தொலேப்பீர் நேரிடுந் தொல்லே
சொல்புத்தி கேளீரேல் வருந்துயர்க் கில்லேயெல்லே. (எ)

2. பெருமழை நாற்பது நாட்கள் பெய்வித்திப்பார்
பேரில்லா திறைவன் நிர்மூலமாக வழிப்பார்
ஒருவருந் தப்பமாட்டீ ரோகோ நீரேன் கெடுவீர்
உனதபரனேப் பணிந் துங்கள் நெறிவிடுவீர். (எ)

---

4. ஜனங்கள் நோவனேப் பரிகசித்தல்.

இ-ம், காபி. திஸ்ர ஏகதாளசாபு.

கண்ணிகள்.

1. நரைத்த கிழவா இந்த நானில மழியுமென்றே
யுரைத்தாயுனக்குப் பித்த மீறித் தலேயேறினதோ
உளராதே - சும்மா - அலருதே - நீ
உந்தன் வாயை மூடிக்கொண்டுபோ.

2. நாற்பதுநாளிரவு பகல் நவிலவொண்ணுதபடி
ஊர்ப்பதிகளெல்லா நீரா லுண்மையா யழிந்திடுமோ
ஓ கோ கோ - அடா - ஆ கா கா - இதை
யுந்தனுக்குச் சொன்ன மூடனுர்?

3. மதியற்றவன் சொன்னுலு மாநிலத்திற் கேட்போருக்கு
மதியில்லேயோ நீ போ போ - வார்த்திகத்தால் பினத்தாதே
வம்பல்லவோ - இதை - நம்பவோ - இவ்
வழியே வராய லோடிப்போ.

MŌHANA $(r^2g^3m^1d^2n^2)$ $\frac{7.(3,4)}{7}$ Vil. ka.

P.	R s : r : — : g : — : r : —	s : ḍ : — : s : — : r : —
	g_k : — : — : — : — : g : —	d : p : — : g : — : r_k : —
	r : g : — : r : — : s : —	ḍ : — : — : s : r : g : p
	r : — : — : — : — : — : —	Fin. s : — : — : — : — : — : — ||
A.P.	g : — : — : g : — : g : —	p : — : — : p : — : p : —
	d : — : — : d : — : d : —	d͡ : ṡ : — : p : — : d : —
	p : d : — : ṙ : — : ṡ : —	d͡ : ṡ : — : p : — : d : —
	ṡ : ṡ : — : d : — : p : —	R g : p : — : g : — : r : —
Ch.	s : r : — : g : — : g : —	g : — : — : g : — : g : —
	r : g : — : p : — : p : —	g : p : — : g : — : r : —
	s : r : — : g : — : r : —	s : r : — : s : — : s : —
	r : — : — : g : — : g : —	p : p : — : p : — : ṗ : —
	g : — : — : g : — : g : —	p : — : — : p : — : p : —
	d : — : — : d : — : d : —	d͡ : ṡ : — : p : — : d : —
	p : d : — : ṙ : — : ṡ : —	d : ṡ : — : p : — : d : —
	ṡ : ṡ : — : d : — : p : —	R g : p : — : g : — : r : —

KĀPI $(r^2g^2m^1d^2n^2)$ $\frac{3}{3}$ Mad. ka.

Ch.	: : s	s : s : —	p : — : p	p : p : —	m : m : m	m : p : —	m : — : g	r : g : r
	: : p	ṡ : n : d	p : — : d	m : p : —	m : m : m	m : p : —	m : — : g	r : s : ṇ
	s : g : —	r_k : — : —	— : — : —	— : s : ṇ	s : g : —	r_k : — : —	— : — : —	— : s : ṇ
	r : g : m	r : g : r	r : s : s	s : — : s	s : — : —	— : — : —	— : — : —	— : — : — ||

5. ஜலப்பிரளய முண்டானது.

இ-ம், புன்னாகவராளி. பல்லவி. ஆதிதாளம்.

மேகம் திரண்டு பெய்தது - சமுத்திரம்போல்
வெள்ளம் புரண்டுவந்தது.

அநுபல்லவி.

பூகம்பிக்க ஊற்றுகள் பிளந்து ஜலம்புரள
ஆகாய மண்டலத்தி னடைப்புகள் திறவுண்ண (மே)

சரணங்கள்.

1. கடன்மடை திறந்ததுபோல் - ஆகாயத்திலே
காளமேகங்கள் வெடிக்க
சடசடவென விந்தத் தாரணியெலா மூழ்க
கிடுகிடுவென ஜீவர் கெடிகலங்கிப் பதற (மே)

2. மலைகளெல்லா முழுகிற்று - எங்கணும்வெள்ள
மயமாய்ப் பூதலமாயிற்று
பலதும்பேசி நோவனைப் பரிகசித்தவர் கூவ
பார்லையையோவெனப் பரிதபித்தே மாள (மே)

---

6. ஜனங்கள் பிழை நினைந்து பிரலாபித்தல்.

இ-ம், நீலாம்பரி. கண்ணிகள். ஆதிதாளம்.

1. சொன்ன புத்தி கேளாமல் - துயருக்காளானோ மின்று
என்னசெய்வோம் பெருவெள்ளம் - ஈர்த்துப்போகு தையையோ!
2. வேதியருள்ளார் நோக - மேவிப் பரிகாசஞ் செய்தோம்
ஈதுதானோ அதன்பயன் - இடர்வந்து நேர்ந்ததுவே.
3. அழிவுக்கு முன்னகந்தை - யென்பதை யறியாமல்
பழிபாவங்களுக் காளாய் - பரிதவிக்கலானோமே!
4. கேடுவருங்கால் மதி - கெட்டுவரு மென்பதுபோல்
தேடிவந்த அருந்தவர் - செஞ்சொற்கேளா தழிந்தோம்.

---

7. கப்பல் மிதந்து போதல்.

விருத்தம்.

அருந்தவ ருரைத்த அன்பின்மா மொழியை அன்றியாம் செவிமடுத் திருந்தால்
பெருந்துயர்க் கின்றுள் ளாகியிரோமே பிழைமிகப் புரிந்தன மென்று
வருந்தியே மாந்தர் வெள்ளத்தின் மாள மகத்துவ பரன்மகிழ் தொண்டன்
பொருந்துதன் குடும்பத் துடன்கலம் புக்கான் போகுதப் புனிதமா கப்பல்!

கப்பற்பாட்டு.

இ-ம், புன்னாகவராளி. பல்லவி. திஸ்ர ஏகதாளம்.

கப்பலிது கப்பலிது - கர்த்தர்
கட்டச்செய்த நோவனின் கப்பலிது
இப்புவி வெள்ளத்தாலே - அழிந்
திட்டநாளில் மிதந்த கப்பலிது.

PUNNĀGAVARĀLI ($r^1g^2m^1d^1n^2$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

P. | R g : g.r:s.s:r.s | n_k :—.s | s : s.r | g:g.r :s.s: r.s | s : — | — : — Fin. ||

A.P. | m:g.m: p :d.p | p.d:n.d | p.m : p.p | m:m.m : m:g.m | p d:p.m | g_k : R r.s |

Ch. A.+A.P.

NILĀMBARI ($r^2g^3m^1d^2n^3$) $\frac{4.2.2.}{8}$ Vil. ka.

Ch. | : p :m :g | m : p | d_k : p | :n.n :ṡ.ṡ : n | ṡ : n | p : — |

| :m.g : m : p | d_k : d_k | n^2d : p | :m.p : m : g | r.g : m | g : s ||

PUNNĀGAVĀRĀLI ($r^1g^2m^1d^1n^2$) $\frac{3}{3}$ Mad. ka.

P. | R p : — : d | p : m : — | — : — : m | p : m : g |

| g_k : — : r | r : s : — | — : — : s | r : s : s |

| n : s : r | g : m : — | — : — : m | p : m : g |

| g_k : — : r | s : s : — | — : — : — | —: — : R — |

அநுபல்லவி.

செப்ப ஒண்ணுமோ இதன் பெருமையை
சீரான நீளமுந்நூறு முழங்காண்
தப்பிலா வகலம் ஐம்பது முழம்
சார்ந்த வுயர முப்பது முழமாம்
நற்புற மேலறை கீழறையோடு
நனிவிசால மமையவே பெற்று
சற்குணன் நோவன் குடும்பத்துக்கென்று
தாரணிசெய்த மிகவழகான (க)

சரணங்கள்.

போகுதுபார் போகுதுபார் - தேவ
பொன்னகரை நோக்கிப் போகுதுபார்
வேகமொடு விண்ணுயர்ந்து - நீரின்
மேல்மிதந்து போகுது பார்.

1. சாகம் புற்பூண்டு தருக்களுஞ் சீவ
ஜந்துக்களு மெல்லாஞ் சமூலமாண்டு
நாகமலைகள் நகர்களழிந்து
நானில நரஜீவர்கள் மடிந்து
சாகும் பிணங்கள் ஜலமேல் மிதந்து
சாபத்தின் பூமி தரையோடழிந்து
போகையில் நோவன் புனிதனை யேற்றிப்
பொன்மலைபோல் காற்று வீசும் புறமாய். (போ)

2. சிங்கங்கரடி செந்நாய் புலியானை
சிறுத்தை யொட்டை கல்யானை கலைமான்
பொங்கு குதிரை யெருத்தங் குரங்கு
பூனை நரிமுயல் காளைகள்யாவும்
துங்கப் புறவுங் காகமும் பருந்தும்
சொர்ன கலாப மயிற் குரண்டமும்
மங்காத மற்றைப் பறவை யினமும்
வகைவகையாய் நோவனொடு கொண்டு (போ)

8. நோவான் கர்த்தரைத் துதித்தல்.

இ-ம், ஹமீர்கல்யாணி. பல்லவி. சதுஸ்ர ஏகதாளம்.

தோத்திரம் தோத்திரம் தோத்திரமெங்கள் தூயபரமனே தோத்திரம்-அருட் சோதியே - நிறை - நீதியே - தயை தோன்றுஞ் சுகநிதியே!

சரணங்கள்.

1. சாத்திரரோது சிகாமணியே - சுரர் - சந்ததம் போற்று மகாமணியே - சுக தத்துவனே - அதி - வித்துவனே - மறை - சாற்று மகத்துவனே. (தோ)

2. விண்ணுரமுதே பேரொளியே-தயை - மேவிய கருணும்பர வெளியே-புகழ் வேதனே - ஜக - நாதனே - துதி - வீறு பரத்துவனே! (தோ)

3. திருவே அன்பி ஞர்கலியே - நிதம் - தேடு மனத்தோர்க் கருமளியே - ஒரு தேவனே - நரர் - ஜீவனே - எம் - சிந்தைக் குகந்தவனே! (தோ)

A.P.	g : r : s	s : r : s	s : ṇ : s	ṇ : s : r
	g : g : r	s : r : s	s : ṇ : s	s : — : r
	g : r : s	s : r : s	s : ṇ : s	r : — : r
	g : — : r	s : r : s	s : ṇ : s	r : — : r
	m : m : m	m : m : g	m : p : m	m: — : g
	m : m : m	m : m : g	m : p : m	m: — : g
	p : p : p	p : d : p	m : p : m	g : — : m
	p : p : p	p : d : p	m : — : p	m: g : (R) m

Ch. P. + A.P.

HAMĪRKALYĀNI ($r^2g^3m^2d^2n^3$) $\frac{4}{4}$ Mad. ka.

P.	(R) ṡ : — : n : d	p : — : d : n	(Fin.) ṡ : n.d : d : p.m
	g : g.r : s : r.r	g : g : g : g.r	g : g : g : r.g
	m' : m' : m' : g.m'	p : p.p : m.p : d.n (R)	
Ch.	p : p.d : d : p.d	ṡ : ṡ : ṡ : n.n	d : n.n : ṡ : ṙ.ṡ
	ṡ : n.d : p : p.d		
	ṡ ; n.n ; ṡ : p.d	d ; d.d ; p : p.m	p : p.p : m.p : d.n (R)

THE STORY OF THE FAITHFUL SAINT.

XI. விஸ்வாச முனிவர் சரிதை.

(ஆபிரகாம் சரிதை. ஆதி. 21^{1-7} 22^{1-19}).

1. கதை வரலாறு.

இ-ம், சங்கராபரணம். ஆதிதாளம்.

பல்லவி.

இந்தச் சரித்திர மானந்தம் - தருமே பத்திக்
சந்தம் - அறுமே பாசபந்தம் - கேட்டவர்க்கு.

அநுபல்லவி.

சொந்தமெனக் கடவுள் - கந்த கழலிணையை
யண்டின விசுவாச - தொண்டன் தனைக் குறித்த (இ)

சரணங்கள்.

1. இல்லை யவரைப்போல - தொல்லுலகிலே யாரும்
எல்லை யிலாக்கடவுள் - சொல்லைப்போலே நடக்க (இ)

2. ஏது குவலயத்தின் - மீது அவருறுதி
ஓது பரனுக்கேற்ற - சாது தனைக்குறித்த (இ)

3. கள்ள மிலாமலேதன் - பிள்ளையைக் கடவுட்கு
உள்ள மிகமகிழ்ந்து - நல்ல பலியாய்த் தந்த (இ)

---

2. பிள்ளையை வளர்த்தல்.

இ-ம், பூர்வகல்யாணி. திஸ்ரகதி ஆதிதாளம்.

பல்லவி.

அருமை பெருமையாக செல்வனை
அகமகிழ்ந்தவர் போற்றி வளர்த்தார்.

அநுபல்லவி.

ஒருபன்னாள் பிள்ளை - யில்லாமலிருந்து
மாநிலம் பெற்ற சுதனை - மாதவத்தோர் (அ)

சரணம்.

வண்ணத் தொட்டிலில் வளர்த்தித் தாலாட்டுவார்
மார்மேலுந் தோள்மேலும் வைத்துச் சீராட்டுவார்
தெண்ணறவே வமுதே யெனப் போற்றுவார்
தேடருஞ் செங்கனியே யெனச் சாற்றுவார்
எண்ணமெலாந் தவிர்த்தெங்களைத் தேற்றவே
இருதயத் துறு மேக்கத்தை மாற்றவே
அண்ணலா ரெம்முது வயதிலே தந்த
அருஞ்சுதனே கண்மணியே யென்றவர் (அ)

SANKĀRABHARANAM ($r^2g^3m^1d^2n^3$) $\frac{4.2.2.}{8}$ Mad. ka.

P.	R g.r :,s. n : s . r : gm.gr | s : —.m | p.m : g.r | Fin.
	gm.p:—.m : p.m : g.r | g.mp : —p | m.g : r.s || R
A.P.	p.p :—.m : p.m : g.r | g.m : p.m | p.m : g.r |
	g : g.g : g.r : g.m | d_k : p.m | g.r : r.s | R
Ch.	A.P.

PŪRVAKALYĀNI ($r^1g^3m^2d^2n^3$) $\frac{4.\ 2.2.}{\frac{3}{8}}$ Vil. ka.

P.	R g.p.m : g.m.g : r.s.n : s.s.s | n.s.r:g g.m | p.—.m: g.g.r || Fin.
A.P.	m.p.d : n.ṡ.ṙ : ṙg.ṙ.ṡn:dn.ṡ.ṡṡ | ṡ.ṡ.n : d.p.m | d.pp.m:gm.m.rg | R
Ch.	g.p.m : g.m.r : r.s.n : s.s.s | d.d.n: s.s.s | r.s.n : s.s.s |
	g.p.p : g.mr : r.s.n : s s.s | d.d.n: s.s.s | n.s.r : r g.g |
	m.p.d : d.d.d : d.—.d: d.d.d | p.p.p:p.p.m | g.m.r : g.p p |
	m.p.d : n.ṡ.r ; ṙ.ṡ.n : d.n ṡ | ṡ.ṡ.m ; d.p.m | g.p.m : g.m.r | R

3. பிள்ளையைப் பலியிட ஆக்கிபாபித்தல்.

இ-ம், ஜெயநாராயணி. பல்லவி. மிஸ்ரதாளம்.

அருமை மிகுமெந்தன் அன்பனே கேளாய்!

அநுபல்லவி.

உரியானே நீ யெந்த னுரைதனைக் கேளாய்!

சரணங்கள்.

1. உற்ற முதிர்வயதில் பெற்ற நின்மகனை
நற்றவனே பலியா - யிட்டிடுவாயே. (அ)

2. நேச நின்சுதனை யென் தாசனே மோரியா
தேசத்திலே மலைமேல் - கூசாது பலிசெய். (அ)

---

4. முனிவர் தேவசித்தத்துக் கமைதல.

இ-ம், செஞ்சுருட்டி. பல்லவி. ஏகதாளம்.

சித்த மெனது பாக்யம் - கர்த்தனே நினது திருச்-

அநுபல்லவி.

சுத்த சுகுணகரனே - சுயஞ் சோதியே பரனே! (சி)

சரணங்கள்.

1. ஜீவகோடிக் காதாரா - தேடுவோர் தமக்கு தாரா
தேவதேவ நிர்விகாரா - தீமையியற்றுத தீரா. (சி)

2. உண்மை யுள்ளவனி யல்லோ - உரைப்பாய்பின் வேறு சொல்லோ
அண்ண லுந்தன் மனங்கல்லோ - அருள்நிறைந்தோ னீகொல்லோ (சி)

3. உந்தனுக்குப் பிள்ளைநானே - உண்டோகதி வேறுதானே
சந்ததமு நின்னைக் கோனே - சார வருளாய்ப் பெம்மானே. (சி)

---

5. முனிவர் பலியிடப் புறப்பட்டுப்போதல்.

இ-ம், சாமா. பல்லவி. ரூபகதாளம்.

பரம்பொருளே கடைக்கண்ணுற்
பார்த்தருளே - காத்தருளே!

அநுபல்லவி.

நிரந்தர நிர்மலத் தூயா
நேயர்கட் கென்றுஞ் சகாயா! (ப)

சரணங்கள்.

1. பத்தியில்நான் குறைந்தவன் - பாவகுணம் நிறைந்தவன்
உத்தமருள் மறைந்தவன் - உள்ளந்தீமை யுறைந்தவன். (ப)

2. நின்னுளத்தை நானறியேன் - நீதிநெறியைக் குறியேன்
பன்னவுமகா சிறியேன் - பத்திசம்பத்தில் வறியேன். (ப)

3. மெய்யுறுதி தாருமையா - வேதனையைத் தீருமையா
பொய்யிலானே வாருமையா - புவிக்கருணை கூருமையா. (ப)

JEYANĀRĀYANI ($r^2g^2m^1d^2n^2$) $\frac{7}{7}$ (3.4) Mad. ka.

P.	R s : r : — : s : — : — : —	r : r : — : r : — : g : r
	r : g : — : m : g : m : —	Fin. g : g : — : r_k : — : — : —
A.P.	p : ṡ : — : ṡ : — : — : —	n : d : — : p : — : m : —
	r : g : — : m : g : m : —	R g : g : — : r : — : — : —
Ch.	p : p : — : p : — : d : p	m : g : — : m : — : — : —
	g : r : — : g : — : m : —	g : r : — : s : — : — : —
	n : ṡ : — : ġ : — : ṙ : ṡ	n : d : — : p : — : — : —
	m : g : — : m : — : d : p	R m : g : — : r_k : — : — : —

SENCHURUTTI ($r^2g^3m^1d^2n^2$) $\frac{4}{4}$ Vil. ka.

P.	R r : g : m : g	r : s : ṇ.ḍ : p	ḍ : s : r : g	Fin. m : p.m : g.r : s
A.P.	g : m : p : p	p : p : p.d : n	ṡ : n : d : p	R m : p : m.g : r.s

Ch. P + A.P.

SĀMĀ ($r^2g^3m^1d^2n^2$) $\frac{2.4.}{6}$ Vil. ka.

P.	R p : ḍ	s : r : m : —	— : —	g : g : r : r
	s : r	g : s : r_k : —	r : p	Fin. m : g : r : s
A.P.	m : g	p : d : ṡ : —	ṡ : —	d : ṡ : — : ṡ
	d : ṙ	ṡ : d : p : —	d : p	R m : g : r : —
Ch.	p : —	p : — : p : —	d : p	m : g : r_k : —
	s : r	g : s : r_k : —	r : g	r : s : s : —
	m : g	p : p : d : —	ṡ : —	d : ṡ : ṡ : —
	d : ṙ	ṡ : d : p : —	d : p	R m : g : r : —

6. பிதா மகனுக் குரைத்தல்.

விருத்தம்.

அண்ணல்தனக் குகந்தபலி யாகத் தானே
　　அருமுனிவன் தன்னுடனே செல்லு மைந்தன்
எண்ணமிலா மற்றன்தந் தையா கத்துக்
　　கெழிற்புருவை கொணரவில்லை யென்றே யுன்னி
விண்ணவன்வேள் விக்குரிய ஆட தெங்கே
　　வேதியனே யென்னருமைத் தந்தாயென்ன
கண்ணிணையே அன்னமகன் தன்னை நோக்கிக்
　　கழறுவான் முனிவர்பிரான் குழறு வானே!

இ-ம், முகாரி. பல்லவி. ரூபகதாளம்.

கர்த்தர் பார்த்துக்கொள்ளுவார் - நீ
கவலைகொள்ள வேண்டாம் மகனே!

அநுபல்லவி.

அத்தன் வேள்விக்குரிய நல்ல
ஆட்டை யிந்த மலையின்மேலே (க)

சரணம்.

வல்ல தேவன் தனக்கோ ராடு
வாய்க்காதோ என்னருமை மகனே! (க)

---

7. தேவதிருவுளத்தை மைந்தனுக் குரைத்தல்.

இ-ம், சஹானா. பல்லவி. மிஸ்ர ஏகதாளம்.

எந்தன் நேசசுதனே - என்னருங் கண்மணியே
இறைவனுர் திருவுள - மின்றுரைப்பேன் கேளாய்!

அநுபல்லவி.

அந்தரியாமியா - மகிலத்துக்குஞ் சர்வேசன்
அடியேற் கிரங்கிக் காட்சி - யளித்ததனை நவில்வேன். (எ)

சரணங்கள்.

1. செல்வனே நீ கர்த்தர்க் - குகந்த சேயனென்றுர்
திருத்தகன பலியா - யுனைத்தரவே புகன்றுர்
நல்வாக் களித்தவரே - யிந்தவிதம் நவின்றுர்
நாதன் திருவுளம்போல் - நடந்தோரருளிற் குன்றுர். (எ)

2. எந்தன் கரத்தாலுன்னை - யிறுகக் கட்டிப்பிணித்து
எரியிடுங்கட்டைமேல் - கழுத்தை யறுத்துவைத்து
கந்த மெழும் பலியாய்க் - கடவுட்கு நிவேதித்துக்
கனவருட்பெறத்திரு - வுளம்பற்றினுர் மதித்து. (எ)

3. கண்மணியே நின்னைக் - கர்த்தற் கொப்புக்கொடுப்பாய்
கலக்கம்யாவு மிந்தத் - தருணந்தனில் விடுப்பாய்
அண்ணலார்க் குறுபலி - யாகவிங்கே படுப்பாய்
அவருக் குகந்தசேய - னென்னவே பேரெடுப்பாய். (எ)

MUGĀRI $(r^2g^2m^1d^2n^2)$ $\frac{2.4.}{6}$ Mad. ka.

```
           R
P.       | s : r | r : m : g : r | s : — | — : — : ḍ : s |
                                                  Fin.
         | r : m | m : p : ḋ : p | m : p | m : g : r : s ||
A.P.     | r : m | m : g : r : s | r : p | m : p : p : p |
                                                   R
         | ṡ : ṡ | n : d : p : ḋ | m : p | m : g : r : s |
```

Ch. A.P.

SAHĀNĀ $(r^2g^3m^1d^2n^2)$ $\frac{7\ (3.\ 4.)}{7}$ Mad. ka.

```
       R
P.   | s : r : — : g : — : r : — | r : r : — : g : g : r : — |
     | r : g : — : m : p : m : — | g : g : — : r : r : s : — |
     | s : r : — : s : — : ṇ : — | ṇ : s : — : ṇ : — : ḍ : — |
                                                     Fin.
     | ṇ : s : — : rk : — g : m  | p : m : — : g : — : r : s ||
A.P  | p : — : — : p : — : m : — | d : d : — : n : — : ṡ : — |
     | ṡ : — : — : ṙ : — : ṡ : — | n : nk : — : d : — : p : — |
     | d : ṙ : — : ṡ : — : ṙ : — | n : nk : — : d : — : p : — |
                                                          R
     | r : g : — : m : p : m : — | g : g : — : r : — : s : — |
```

Ch. P. + A.P.

8. பலியிடுதல்.

விருத்தம்.

அத்தனின் றிருவு ளத்தை யரும்பிதா சொல்லக் கேட்ட
பத்தியின் மிகுந்த சேயன் பகவானின் றிருவு ளம்போல்
இத்தரை நடத்து மென்ன விசைந்துவே திகைப டுத்தான்
கத்தியை யெடுத்து மேலோன் கழுத்துநே ரோச்சினனே!

இ-ம், பந்துவராளி. பல்லவி. ஆதிதாளம்.

கத்தி கரத்தி லெடுத்தான்-முனிவன் சேயன்-கழுத்தினுக்குக் குறிவைத்தான்!

அநுபல்லவி.

அத்தனே நித்தனே அமலனே யென்று
ஆண்டவனருள் திருவடியைப் பணிந்து (க)

சரணங்கள்.

1. நல்லசுதனைப் பலிபீடத்து நடத்தி
நயந்து கட்டி வேதிகையிற் கிடத்தி
எல்லையிலாப் பரனே யித் தடத்தி
லிப்பலி யேற்றருளெனத் துயர் கடத்தி (க)

2. ஏகப்புதல்வ னென்னும் பாசத்தை நீக்கி
இலர்ந்துறு மெய்விதிர்ப் பாதியைப் போக்கி
ஏகவேகனே எனவே விண் ணேக்கி
எழிற்சேயனைக் கழுத்தரிய கை தூக்கி (க)

---

9. தூதன் முனிவனைத் தடுத்தல்.

இ-ம், தேசிககமாஸ். பல்லவி. திஸ்ர ஏகதாளம்.

சீர்புகழ் வன்றொண்டனே நின் - செல்வன்மேற் கைபோடாதே!

அநுபல்லவி.

பார்புகழ் நினது பக்தி - பான்மை கண்டோம் வாடாதே. (சீ)

சரணங்கள்.

1. ஒப்பில்லா விஸ்வாசனே நின் - உறுதியை யின்றறிந்தோம்
அப்புறங் கத்தியை யெறிந்தே - யருஞ் செல்வனை விடுவிப்பாய். (சீ)

2. ஏக புத்ரனென்றும் பாரா - திவனை நீ படைத்தனை
வாகாயுனை யாசீர்வதித்தோம் - வாழ்க வூழிகாலமே! (சீ)

---

10. தோத்திரம்.

இ-ம், சக்ரவாகம். பல்லவி. ஆதிதாளம்.

சாற்றரு நித்திய சாக்ஷாத் பரனே - சந்ததந் தோத்திரந் தோத்திரமே!

அநுபல்லவி.

போற்றரு மானந்த புண்ணிய பதனே
புனித நெஞ்சத்தினர் புகழுஞ் செம்பதனே! (சா)

சரணங்கள்.

1. உண்மையிற் குன்று நன்மைசொரூபி-உலகெலாம் புரந்தளிக்கும் அரூபி
வண்மையிற் குறையா மகத்வப்ரதாபி-மாறு அருளாளா நிஷ்கோபி (சா)

2. உத்தம பத்தருக் குரிய நற்பாகா-உள்ளத்தி லானந்தந் தரும் யோகா
சத்திய சாக்ஷாத் பரமனே ஏகா-சங்கீத விற்பனர் சக்கிர வாகா. (சா)

PANDHUVARĀLI ($r^1g^2m^2d^2n^3$) $\frac{4.2.2}{8}$ Vil. ka.

P. | R ṡ : n : p :—.m | g : — | g.m:p.m | r_k :— :—:s.ṇ | s.r:g.m | p.d: n.ṡ |

| ṡ : n : p :—.m | g :— | g.m:p.m | r :—:— :— | s : — | — : — || Fin.

A.P. | p.m:p.d:d.p:n.ṡ | n.ṡ: ṙ.ṡ | n.d: n | ṡ.ṙ:ṡ.n:d.d:p.m | p.d:p.m | g.m:p.d | R

Ch. | p :p.p:p.p:p.m | p.d:p.m | g.r :g_k | m :g.r:s.s : ṇ | ḍ.ṇ:s.r | g : g |

| p.m:p.d:d.p:n.ṡ | n.ṡ:ṙ.ṡ | n.d: n | ṡ.ṙ:ṡ.n:d.d:p.m | p.d:p.m | g.m:p.d | R

DĒSIKA KHAMĀS ($r^2g^3m^1d^2n^2$) $\frac{3}{3}$ Mad. ka.

P. | R s : — : g | g : — : m | p : — : m | p : d : n |

| ṡ : — : n | d : — : p | m : p : m | g_k : —:— || Fin.

A.P. | ṡ : — : ṡ | ṡ : — : ṙ | ṡ : — : n | d : p : d |

| ṡ : — : n | d : p : m | p : — : m | g_k : —:— | R

Ch. P. + A.P.

CHAKRAVĀHAM ($r^1g^3m^1d^2n^3$) $\frac{4.2.2}{8}$ Mad. ka.

P. | R d.n : ṡ.n : n.d : p.m | g.m : p.m | g : r_k |

| s.ṇ : ḍ.ṇ : s.r : s | s.m : g.m | p : p.m || Fin.

A.P. | p.m : p.d : n.ṡ : ṙ | ġ.ṁ : ġ.ṙ | ṡ.n : ṡ |

| ṡ.ṙ : ṡ.n : n.d : p.m | g.m : p.m | g.r : s | R

Ch. | p.d : n.d : p.p : p.m | g.m : p.m | g.r : s |

| s.ṇ : ḍ.ṇ : s.ṇ : s | s.m : g.m | p.p : p |

| p : p.d : n.ṡ : ṙ | ġ.ṁ : ġ.ṙ | ṡ.n : ṡ |

| ṙ : ṡ.n : —.d : p | g.m : p.m | g.r : s | R

THE STORY OF THE UPRIGHT MAN.

XII. குணசீலன்-சகோதர துவேஷம்.

(யோசேப்பு சரித்திரம். ஆதி. 37-45.)

1. குணசீலன் இளமை.

இ-ம், காம்போதி. பல்லவி. மிஸ்ர ஏகதாளம்.

வாலவயதிற் கர்த்தன் மலரடி சேவித்து
மாணருள் மிகப்பெற்றனே.

அநுபல்லவி.

சால தவத்தினன் யாக்கோபு பெற்ற தனயன்
சற்குணநிறை யோசேப்பென்னும் வடிவழகன் (வா)

சரணங்கள்.

1. பன்னிருசேயருள் பத்திசீலங் கதித்தான்
பக்ஷத்தால் தந்தை பல வர்ண அங்கி தரித்தான்
அண்ணன்மார் துர்ச்செய லறிந்து தந்தைக் குரைத்தான்
அவர்களின் நீங்காத பகையை அவன் வரித்தான். (வா)

2. பிந்தின வாழ்வதைச் சொப்பனந்தனிற் கண்டான்
